

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.6.2024) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், வருகின்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரினை முன்னிட்டு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன்,தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன தலைவர்/ அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர்.எஸ்.விஜயகுமார், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர், ஹனிஷ் சப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர்.டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர், கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர், எஸ்.சிவராச, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (12.06.2024) ஆணையர் அலுவலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட வேண்டிய புதிய அறிவிப்புகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவில்லா பற்றுக் கொண்டவர்

# மன்னார்குடி சேப்பையன் (எ) ஆறுமுகம் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 14–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற பற்று கொண்டவர் மன்னார்குடி சேப்பையன் என்கிற ஆறுமுகம். அவரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி நகரத்தைச் சேர்ந்த சேப்பையன் என்கிற எல்.ஆறுமுகம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது, எதிரிகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக்கொண்டு தீரத்துடன் போராடி முறியடித்ததால், தலைவர் கலைஞர் அவர்களால் "முண்டாசு சேப்பையன்" என அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் மீது அளவில்லா பற்றுக்கொண்டு இயங்கிய கழக முன்னோடியான இவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் – அ.புதூரில்

# சாலை விபத்தில் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 14–

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழுந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி, கந்தன்குட்டை செல்லும் வழியில் 12.06.2024 அன்று தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்த திருமதி. கோவிந்தம்மாள் (வயது 65) க/பெ. பச்சமுத்து, திருமதி. சின்னப் பொண்ணு (வயது 66) க/பெ.முத்துசாமி மற்றும் சிவலிங்கம் (வயது 47) த/பெ. செல்லமுத்து ஆகியோர் மீது அடையாளம் தெரியாத நபர் ஓட்டிவந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்த திருமதி. கோவிந்தம்மாள் என்பவருக்கு மகுடஞ்சாவடி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சின்னப்பொண்ணு மற்றும் சிவலிங்கம் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திருமதி. கோவிந்தம்மாள் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத் திற்கு ஐந்து இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி – இனியாவது மணிப்பூர் செல்வாரா?

## உத்தவ் தாக்கரே கேள்வி!

மும்பை, ஜூன் 14 –

மணிப்பூரில் அமைதியை மீட்டெடுக்க பிரதமர் மோடி முயற்சி செய்வாரா? ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தே சொல்லி விட்டாரே இனியாவது மணிப்பூருக்கு செல்வாரா மோடி? என உத்தவ் தாக்கரே கேள்வி எழுப்பியுள்ளார்.

மணிப்பூரில் ஓராண்டுக்கும் மேலாக கலவரம் நீடிப்பது கவலை தருகிறது என்று பிரதமர் மோடியை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் மறைமுகமாகச் சாடியிருந்தார்.

மணிப்பூரில் அமைதியை மீட்டெடுக்க முன்னுரிமை அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார் மோகன் பகவத் தேர்தல் வாய்ச் சவடால்களை விட்டு விட்டு, நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மோகன் பகவத் கூறியிருந்தார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரின் நிலைமை பற்றி ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தின் அறிவுறுத்தலுக்கு பிறகாவது மோடி மணிப்பூருக்குச் செல்வாரா? என்றும் இனியாவது மணிப்பூரில் அமைதியை மீட்டெடுக்க பிரதமர் மோடி முயற்சி செய்வாரா? என்றும் உத்தவ்தாக்கரே கேள்வி எழுப்பியுள்ளார்.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370வது சட்டப்பிரிவை நீக்கிய பிறகு அங்கு என்ன மாற்றம் ஏற்பட்டது காஷ்மீரில் இப்போதும் துப்பாக்கிச்சூடு, தீவிரவாத தாக்குதல் தொடர்கிறது. பல உயிர்கள் பலியாகின்றன. இதற்கு யார் பொறுப்பு? என்றும் உத்தவ் தாக்கரே வினவினார்.

சேலம் மாவட்டம், வலசையூர் அருகே சுக்கம்பட்டி கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் – நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 14–

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், வலசையூர் அருகே சுக்கம்பட்டி கிராமத்தில், அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் நேற்று முன்தினம் (12.6.2024) காலை 10.40 மணியளவில் அரூரிலிருந்து சேலம் நோக்கி சென்ற லாரி ஒன்றின் பின்னால் இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது, ஆச்சாங்குட்டப்பட்டியிலிருந்து சேலம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் இருசக்கர வாகனங்களில் பயணம்செய்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நில அளவையராக பணிபுரிந்துவந்த முருகன் (வயது 30) த/பெ.ராஜி மற்றும் அவரது மனைவி திருமதி.நந்தினி (வயது 25) மற்றும் பூவனூரைச் சேர்ந்த திருமதி. வேதவள்ளி (வயது 28) க/பெ.லட்சுமணன் ஆகிய மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில், முருகன் மற்றும் திருமதி. நந்தினி தம்பதியரின் ஒரு வயது குழந்தை கவின் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தது என்ற துயரகரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையுமடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

காளையார் கோவில்

# திருமதி அருட்செல்வி கணவர் மறைவு!

## சுப.மதியரசன் – கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஜூன் 14 -

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றிய குழு முன்னாள் தலைவர் திருமதிஅருட் செல்வி அரசுவின் கணவர் மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி அருட் செல்வி அரசு. இவரது கணவர் அரசு. கழகத்தின் மூத்த முன்னோடியாகவும் , ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளராகவும் இருந்து வந்தார்.

நேற்று முன்தினம் அவர் புதன்கிழமை திடீரென மறைவெய்தினார்.

அரசுவின் உடலுக்கு முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், ஒன்றிய செயலாளர்கள் வே.ஆரோக்கிய சாமி, யோக கிருஷ்ண குமார் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், சூராணம் உள்வட்டம், வல்லகுளம் கிராமத்தில், நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், பார்வையிட்டார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வ.மோகனச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

## சட்டப்பேரவை இடைத்தேர்தல் – 2024

# விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கான தேர்தல் பணிக்குழு

## தலைமைக் கழகம் அறிவிப்பு !

வருகிற ஜூலை 10 அன்று நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்திடவும் - தொகுதிகளில் நடைபெற வேண்டிய பணிகளைத் தலைமைக் கழகம் சார்பில் கவனித்திடவும் "தேர்தல் பணிக்குழு" பின்வருமாறு நியமிக்கப்படுகிறது.

### விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பணிக்குழு

மாண்புமிகு **க.பொன்முடி** (துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.)

**எஸ்.ஜெகத்ரட்சகன்**, எம்.பி., (கொள்கைப் பரப்புச் செயலாளர், தி.மு.க.,)

| | | |
|---|---|---|
| காணை மத்திய ஒன்றியம் | : | **மாண்புமிகு கே.என்.நேரு,** (முதன்மைச் செயலாளர், தி.மு.க.) |
| விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | : | **மாண்புமிகு எ.வ.வேலு** |
| விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | : | **மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** |
| காணை வடக்கு ஒன்றியம் | : | **மாண்புமிகு அர. சக்கரபாணி** |
| கோலியனூர் மேற்கு ஒன்றியம் | : | **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்** |
| விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் | : | **மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர்** |
| விக்கிரவாண்டி பேரூர் | : | **மாண்புமிகு சி.வி.கணேசன்** |
| காணை தெற்கு ஒன்றியம் | : | **மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி,** |
| | : | **டாக்டர் ஆர். லட்சுமணன், எம்.எல்.ஏ.,** |

**குறிப்பு : ஜூன் 14ஆம் தேதி அன்று மாலை, விக்கிரவாண்டியில் உள்ள "ஜெயராம் திருமண மண்டபத்தில்" நடைபெறவுள்ள தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் மேலே குறிப்பிட்ட தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பர்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்- 12.6.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.